**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்**

**சி.சி.எண்.53/2022**

பெயர் – ரவிக்குமார்(PW1)

நாள் – 02.09.2025

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐடிஐ படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பட்டாசு தயார் செய்வதற்கான குழாய் மிசின் வைத்துள்ளேன். மிசின் மூலம் குழாய் தயாரிப்பதற்கான உரிமம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய கம்பெனியின் பெயர் என்ன என்றால் மணிராஜ் பேப்பர் டியூப் ஆகும். எனது கம்பெனியின் பெயரில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான்.

2) என் பெயரில் தனியாக வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். எனது வங்கி கணக்கை பார்த்தால் மாத வரவு செலவு தெரியவரும் என்றால் சரிதான். நான் கம்பெனி நடத்துவதால் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எதிரி என்ன கம்பெனி வைத்துள்ளார் என்றால் குழாய் தயார் செய்வதற்கான மிசினே வைத்துள்ளார் என்றால் சரிதான்.

3) எதிரியின் கம்பெனி பெயர் சொர்ணலட்சுமி மற்றும் ருத்ரா டெக் என்றால் சரிதான். அந்த கம்பெனியை விரிவாக்கம் செய்வதற்காக தான் என்னிடம் கடன் வாங்கியதாக கட்சி செய்து வருகிறேன் என்றால் குடும்ப செலவிற்காகவும், கம்பெனியை விரிவாக்கம் செய்வதற்காகவும் என்னிடம் பணம் வாங்கினார். எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 8 வருடமாக தெரியும். அவர் என்ன படித்திருக்கிறார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

4) சொர்ணலட்சுமி மற்றும் ருத்ரா டெக் கம்பெனி எங்கு உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 05.09.2019ம் தேதியில் 1 லட்சம் ரூபாய் ரொக்கமாகவும், 24.09.2019ம் தேதி வங்கி கணக்கு மூலமாக 10 லட்சம் ரூபாய் எதிரிக்கு கொடுத்தேன். 10 லட்சம் ரூபாய் எதிரியின் வங்கி கணக்கிற்கு தான் அனுப்பி வைத்தேன் என்றால்

சரிதான். அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) மேற்படி எதிரியின் வங்கி கணக்கிற்கு நான் பணம் செலுத்தவில்லை என்றும், அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.20,000/–த்திற்கு மேலாக பண பரிவர்த்தனை செய்யும் சூழலில் வங்கி மூலம் தான் பணம் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்று சட்டம் உள்ளது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6) ஒரு லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்ததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் பழக்கம் என்ற முறையில் கொடுத்தேன். ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம் என்னிடம் இருப்பது குறித்து எதிரிக்கு தெரியாது என்றும், எதிரி கடன் கேட்டு வருவார் என்று எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். காசோலையை வாங்கி பின்பு தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். ஹச்டிஎப்சி காசோலையை யார் நிரப்பினார் என்றால் தொகை குறித்து நான் தான் நிரப்பினேன்.

7) நான் கடன் கொடுத்த விபரம் அனைத்தும் எனது வருமானவரி கணக்குகளில் வெளிப்படும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் அந்த கணக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த ஒரு கடனும் வாங்கவில்லை என்பதால் தான் அந்த கணக்குகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**